In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC | 29/2020 |
| PW: | 1 |
| காவல் நிலையம்: | கோவில்பட்டி மேற்கு |
| தேதி: | 20-07-2026 நாள்: திங்கள் |
| பெயர்: | சின்னஜமீன் |
| த/பெ: | வெள்ளத்துரை |
| ஊர்: | கோவில்பட்டி |
| வேலை: | பால்பண்ணை |
| வயது: | 33 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.07.2026** (Accused present).

<u>**முதல்விசாரணை**</u>

1) நான் கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் பால்பண்ணை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சம்பவ காலத்தில் யார் என்னை அடித்தார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் **மனுவில்** உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது தான். **(மேற்படி புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

<u>**அரசு தரப்பில் விசாரணை**</u>

1. கடந்த 27.01.2019 ம் தேதி மாலை 05.00 மணிக்கு மந்தித்தோப்பு ரோட்டில் உள்ள பாம்பே ஸ்வீட்ஸ் கடை அருகே நான் எனது வாகனத்தை திருப்பிய போது, எதிரே வந்த வாகனத்தை பார்த்து நான் தடுமாறியதால் எதிரியை பார்த்து போகும் படி

கூறியதற்கு எதிரி கெட்ட வார்த்தைகளால் பேசி என்னை அடித்து காயங்கள் ஏற்படுத்தியதாகவும், கொலைமிரட்டல் விடுத்தாகவும், இதுகுறித்து நான் புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு ஆஜர் எதிரியுடன் சமாதனமாக சென்றுவிட்ட படியால் தற்போது அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** <u>இல்லை</u>

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.